# மாற்று உருவாக்கச் சிந்தனைகள்

**முனைவர் இரா.ஏஞ்சல்**
**உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்**
**பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை – 18.**

48

**ஆய்வுச்சுருக்கம்**

மாற்றம் என்பதே மாறாதது என புதிய மாற்றத்தை எதிர்நோக்கி காத்திருத்தலை விட, மாற்றத்திற்கான கருவிகளாக நாம் மாற வேண்டும். தனி மனித நிலையிலும் சமூக நிலையிலும் மாற்று உருவாக்கச் சிந்தனைகளை விதைப்பவராக நாம் மாற வேண்டும். இதனையே படைப்பாளன் தன் படைப்பில் வெளிப்படுத்துகிறான். படைப்பின் வழி வாசகன் பன்முக நோக்கில் படைப்பை அணுகி ஆராய்கிறான். இப் பின்னணியில் முனைவர் எம்.எஸ்.காந்திமேரியால் படைக்கப்பட்ட நளாயினி என்ற ஒருத்தி…தீ… என்னும் நாடகத்தில் மாற்று உருவாக்கச் சிந்தனைகள் காணம்படும் விதத்தை, பெண் மையச் சிந்தனையில் ஆய்வதாக இவ் ஆய்வுக் கட்டுரை அமைகிறது.

**திறவுச் சொற்கள்**

நளாயினி, மௌத்கல்யரிஷி, பத்தினி, வெள்ளாடு, புழங்கு வெளிகள், அதிகாரப் பராமரிப்பு

**முன்னுரை**

பொதுவாக மண்ணில் விதைக்கப்படும் விதைகள் மண்வளம் நன்றாக இருந்தால் மட்டுமே நற்பலன் தரும். விதைகள் விதைக்கப்படும் ஆழத்தைப் பொறுத்தே செடி, கொடி, மரம் ஆகியவை வலுவுள்ளதாய் அமையும். அதுபோலத்தான் நம் மனமும். மனம் எனும் தோட்டத்தில் நற்சிந்தனைகள் உருவாக வேண்டும். அவை செயல் வடிவம் பெறும்போது சமூக மாற்று உருவாக்கக் காரணிகளாக மாறி விடுகின்றன. இச் சிந்தனை வித்துக்களை, தனக்குப் பிடித்த இலக்கிய வகைமைக்குள் பொருத்தி, தான் வாழும் காலகட்டத்தில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்வுகளையும் உற்றுநோக்கி, உள்வாங்கி படைப்பாளர்கள் தம் படைப்பில் வெளிப்படுத்துகின்றனர்.

நாடகப் படைப்பாளரான முனைவர் எம்.எஸ்.காந்திமேரியால் படைக்கப்பட்ட நளாயினி என்ற ஒருத்தி…தீ என்னும் நாடகத்தில் சமூக மாற்று உருவாக்க வித்துக்கள் இடம் பெறுமாற்றைக் கண்டறிந்து, ஆய்விற்கு உட்படுத்துவதே கட்டுரையின் நோக்கமாகின்றது.

**சிறு நகர்வும் … பெரு மாற்றமும்…**

“அடிக்க அடிக்க அம்மியும் நகரும்” என்பது பழமொழி.ஆண்டாண்டு காலப் பின்னணியில் பெண்நிலையை ஆழ்ந்து சிந்தித்தால் சமூகத்தில் பெண்ணிற்கான வெளியை அறிந்து கொள்ள இயலும். ஒரு காலத்தில் பெண் இருந்த நிலை மாறி,

**“வீட்டிற்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம்**
**என்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்”1**

(மகாகவி பாரதியார் கவிதைகள் ப.207) என்ற பாரதியின் பாடல் வரிகள் பொய்த்துப் போகாது மெய்த்துவம் பெற்று விட்டன. அதே வேளையில் பெண்ணிற்கான பணிச்சுமை அதிகரித்து விட்டது என்பதே உண்மை. வேலைக்குச் செல்வதால் ஆணிற்கு இணையாகப் பெண் உரிமை அடைந்து விட்டாள் என்று கூறி விட முடியாது. தனிப்பட்ட விதமாய் அவளின் அறிவு நிலை நிரப்பப் படுகிறதே

ஒழிய, அவளுக்கான பணிச்சுமைகளும் மனச்சுமைகளும் அதிகரித்துள்ளன என்பதே உண்மை. இவற்றைப் புறந்தள்ளி அகநிலையில் ஆராய்ந்திடின் அவள் தனக்குள் சிறுநிலையில் தன்னிறைவு பெறத்தான் செய்கின்றாள். ஆனால் இந் நிறைவு சமூக நிலையில் ஆணிற்கும் பெண்ணிற்குமான இணைநிலை மனநிறைவாக மாறிடின் ஆண்,பெண் இன வேறுபாடு மறைந்து மனிதம் செழித்தோங்கும்.

**“ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்**

**அறிவிலோங்கி இவ் வையம் தழைக்குமாம்” 2**

(மகாகவி பாரதியார் கவிதைகள் ப.204) பாரதியின் பாடல் வரிகளும் செயலாக்கம் பெறும்.

**நகர்வும் தொடக்கமும்**

சமூக மாற்ற நகர்விற்கான களம் குடும்பமே! நல்லவை என்பதன் முரணாக அல்லவை உள. மனித இன இரு பால்களுள் ஆணுக்கும் பெண்ணுக்கும் பாகுபாடுகள் காலங்காலமாக இருக்கத்தான் செய்கின்றன. இதற்கான தோற்றுவாய் எங்கே பிறக்கிறது என்றால் குடும்பக் கட்டமைப்பில் பெண்ணிடமிருந்து தான் துவங்குகிறது. ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ள நாடகத்தில் பெண்கள் நினைத்தால் சமூகத்திற்கான மாற்று உருவாக்கச் சிந்தனைகளை விதைக்க முடியும் என்னும் கருத்து உள்ளார்ந்த நிலையில் பதிவு செய்யப்பட்டுள்ளதை அறிய முடியும்.

நளாயினி என்ற ஒருத்தி… தீ… நாடகத்தில் பெரியவர், அவரின் மனைவி பார்வதி, அவர்களின் மகன் தியாகராஜன், தியாகராஜனின் மனைவி ராஜி, அவர்களுடைய மகன் சுந்தர் என குடும்ப அமைப்பைக் கொண்ட கூட்டுக் குடும்பம் அது. அக் குடும்பத்தில் வீட்டுவேலை செய்யும் உதவியாளராக முத்தம்மா இருக்கிறாள். முத்ம்மாவிற்கு உடல்நலக்குறைவு ஏற்பட, அவளுடைய கணவன் முனியன் முத்தம்மாவால் இருநாட்கள் வேலைக்கு வர முடியாது என்று கூறுகிறான். அதற்குப் பெரியவர், “இந்த வேலைக்காரங்களை நம்பி ஒன்னும் செய்ய முடியாது” (ப.51) என்கிறார். அதற்கு முனியன் கோபத்துடன்,“நாங்க என்ன எந்திரமா? எங்களுக்கும் உடம்புக்கு எதுவும் வராதா? ரொம்பத்தான் அலுத்துக்கிறீங்க. விருப்பம் இல்லைன்னா வேலையிலிருந்து நீக்கிடுங்க (ப.51) என்கிறான்.

முனியன் – முத்தம்மா குடும்பக் கட்டமைப்பில் பொருளாதாரப் பின்னணியில் ஆணாதிக்கப் போக்கில் அவன் தன் மனைவியைக் கட்டாயப்படுத்தி வேலைக்கு அனுப்பியிருக்கலாம். ஆனால் முனியனோ உணர்வுள்ள, தன் மனைவி மீது அக்கறை கொண்ட ஆண்மகனாகச் சித்திரிக்கப்படுகிறான்.

சமூகக் கட்டமைப்பில் பெண்ணிற்கான அடிப்படைத் தேவைகளையோ அல்லது உணர்வுகளையோ புரிந்து கொள்ளாத தலைமுறைகளின் தொடர்ச்சியில் மாற்று உருவாக்க வித்திற்கான சிறு சமூக நகர்வுக்கு முனியன் காரணமாகப் படைக்கப்படுகிறான். நாடகத்தில் இடம் பெறும் பெரியவரோ அவரது மகன் தியாகராஜனோ தம் மனைவியை இணையாய்ப் பார்க்காத நிலையில் முனியன் தன் துணைவியை மனுஷியாய்ப் பார்க்கின்றான். அவன் தன் மனைவி மீது கொண்ட அக்கறை அவளுக்கான பரிந்துரைக் குரலாக ஒலிக்கிறது. அவர்களுடைய குடும்ப உறவில் முனியன் என்ற ஆண்மகனுடைய தலைமுறை மரபு நிலையிலான சமூகக் கட்டமைப்பு ஆதிக்க உணர்வானது, மாற்றுருவாக்கம் பெறுவதைக் காண முடிகிறது. இதற்கு முத்தம்மா பயன்படுத்திய ஒரே

ஆயுதம் அன்பே! முத்தம்மா முனியனிடம் ஏற்படுத்திய மாற்றம் ஒருவேளை அவர் தம் குடும்பத்தில் ஆண்குழந்தைகள் இருந்திருப்பின் பிள்ளை வளர்ப்பில் வேறுபாடின்மை என்ற கருத்துருவாக்கத்திற்கான தோற்றுவாயாகக் கூட அமைந்திருக்கும்.

**நகர்வுக்கான முன்னெடுப்புகள்**

இந் நாடகத்தில் சிறுவன் சுந்தர் தனக்குப் பள்ளிக்கு நேரமாகி விட்டதால் தன் பாட்டியிடம் உண்பதற்கு இட்லி கொடுக்கச் சொல்கிறான். பாட்டியோ அவனுடைய அம்மாவிடம் போய்க் கேட்குமாறு கூறுகிறாள். இந்நிலையில் குளித்து முடித்து அலுவலகம் செல்லத் தயாராகி உணவு உண்ண வருகின்றான் ராஜியின் கணவன் தியாரகாஜன். ராஜி அவனிடம்“….. மதிய சமையல் ஆகுது. சுந்தருக்கும் ரெண்டு இட்லி எடுத்து வையுங்க (ப.53) என்கிறாள். தியாகராஜன் முணங்கிக் கொண்டே சுந்தருக்கு இட்லி எடுத்து வைக்கிறான். இந் நிகழ்வின் பின்னணியில் இச் செய்தியை உற்று நோக்கிடின் ராஜி கல்லூரிப் பேராசிரியை. அவளுக்கு வீட்டு வேலைகளில் உதவி செய்வதற்காக வரும் முத்தம்மா வர இயலாச் சூழலில் தியாகராஜன் தன் பெற்றோரின் துணியைத் துவைத்து விட்டு வேலைக்குச் செல்லுமாறு ஆணையிடல், காபி கொண்டு வந்து கொடுக்கும் ராஜியிடம் காப்பி ஆறி விட்டது எனக் குற்றஞ்சாட்டல், வேலை முடிந்து வீடு திரும்பும் போது வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கி வரும்படி கூறல் எனக் குடும்பப் பொறுப்பு அனைத்தையும் அவளுடைய தலையில் கட்டி விடுகிறான். எல்லா நிலைகளிலும் தியாகராஜன் தன் மனைவியை அடிமையாகவே நடத்துகிறான். சமூக வெளியில் ஆணினத்திற்கே உரித்தான போக்கான “அதிகாரப் பராமரிப்பு” காணப்படும் விதம் படைப்பாளரால் பாத்திர உரையாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதிகாரப் பராமரிப்பு என்பதன் பொருள் யாதெனின், “ஆண்பாத்திரங்களின் உணர்வுகளை அதே முறையில் உரையாடலாகக் கொடுக்கும் கதைசொல்லி, பெண்பாத்திரங்களின் உரையாடல்களைத் தனது விளக்கங்களாகக் கொடுத்துச் செல்வதைப் புனைவுகளில் சாதாரணமாகக் காணலாம்.” 3 எனும் விஜயலட்சுமியின் கருத்து வழி அறிய முடிகிறது.

ஆனால் அதே வேளை ராஜி மகனுக்கு இட்லி எடுத்து வைக்குமாறு கூறும் போது முணுமுணுத்துக்கொண்டே எடுத்து வைக்கிறான். ஆண் என்னும் மீஉயர் மனப்பான்மை கொண்ட தியாகராஜன் முடியாது என மறுக்கவில்லை. ஆனால் தியாகராஜனின் தாய் அவனுடைய மனதில் ஆணாதிக்கப் போக்கைத் திணிக்கும் தாயாகவே இருக்கிறார். தியாகராஜன் தன் மனைவியிடம் தன் பூட்சுக்குப் பாலிஷ் போடச் சொல்கிறான். ராஜி அவனிடம், “நாலுமணிக்கு எழுந்திருச்சேன். வேலை இன்னும் முடியலை.நானும் கல்லூரிக்குக் கிளம்பணும். உங்களுக்கு மதியச் சாப்பாடு எடுத்து வச்சிட்டேன். இதோ காப்பி கொண்டு வர்றேன். பூட்சுக்கு பாலிஷ் நாளைக்குப் போட்டுத் தாரேன்” (ப.53) என்று கூற, இதனைக் கேட்டுக் கொண்டிருந்த அவனுடைய தாய் பார்வதி, “இன்னிக்குப் பாலிஷ் போடச் சொன்னா நாளைக்குப் போடுறாங்களாம்” (ப.53) என்கிறாள். தியாகராஜனும் தன் மனைவியின் மீது கழிவிரக்கம் கொள்ளாது பார்வதியிடம்,“ அம்மா.. இவங்க கல்லூரிப் பேராசிரியர். என் பூட்சுக்குப் பாலிஷ் போடுவாங்களா? (ப.53) என்று கூறுகிறான். அதற்குப் பார்வதி,“ உன்னை விட ரொம்ப சம்பளம் வாங்குறா இல்லையா? நாம ஏன் செய்யணுமுனு நினைப்பா…. எல்லாம் வேலை பார்க்கிற மண்டைக் கர்வம்.” (ப.54) எனத் தூண்டி விடுகிறாள். இச் சூழலில் பார்வதி தன் மகனிடம் “ராஜியும் வேலைக்குச் செல்கிறாளே… உன்னுடைய வேலையை நீயே செய்து கொள்ளக் கூடாதா?”

என்று கடிந்து கொண்டிருந்தாலோ அல்லது அமைதியாகவே இருந்திருந்தாலோ கூட கணவன் – மனைவி இருவருக்கும் இடையே சிக்கல் இல்லாது இருந்திருக்கும்.

தான் தன் மருமகளைப் போலப் படிக்கவில்லை வேலைக்குச் செல்லவில்லை சம்பாதிக்கவில்லை என்ற பொறாமை உணர்வுடனான தாழ்வுமனப்பான்மையும் "பெண்ணுக்குப் பெண் தான் எதிரி" என்ற பிற்போக்குச் சிந்தனையும் பார்வதியின் அடையாளமாய்ச் சுட்டப்படுகிறது. சமூகக் கட்டமைப்பு நிலையில் பெண்ணிய வார்ப்பில் மரபு சார் நிலையில் பார்வதியின் வளர்ப்பும் வார்ப்பும் கூட பார்வதியி ன் மனநிலைக்கான காரணிகளாக அமைந்திருக்கலாம். அதனால் பார்வதி தியாகராஜனை ஆண்மகனாக மட்டுமே வளர்த்திருப்பாரே ஒழிய மனிதாபிமானம் கொண்டவராகக் கூட வளர்க்கவில்லை. அதே வேளையில் ராஜியின் பெற்றோரோ அவளுக்குக் கல்வியறிவு கொடுத்ததன் விளைவாக தன் மௌனமொழி வழியாய் வெற்றி பெறுகிறாள். தன் குடும்பச்சூழல் இப்படித்தான் என ஏற்றுக் கொண்டு, மரபு பேணும் பெண்ணாக, அதே சமயம் தன் கருத்தைப் பதிவு செய்து விட்டு, எதையும் கண்டு கொள்ளாமல் தன் எண்ணங்களை நிறைவேற்றி தனக்கான பன்முகப் பணிநிலையிலான வெளியினை நிரப்பிக் கொள்ளும் பெண்ணாக இருப்பதைக் காணமுடிகிறது.

**குடும்பத்தில் விதைக்கப்படின்…….**

இந்நாடகத்தில் ராஜியின் மகன் சுந்தர், முத்தம்மா வேலைக்கு வராத சூழலில், தன் தாயிடம் "என் சட்டையை நானே துவைச்சுக்குறேன். நீ பாவம் … தனியா வேலை செய்யுற.. (ப.51) என்று கூறுமிடத்தும் "அப்பா … அம்மா பாவம்…. நீங்களும் அம்மா கூட வேலை செய்யுங்க" (ப.51) என்று கூறுமிடத்தும் ஆண்மகன் என்ற நிலை தாண்டி, மனித மன உணர்வு நிலையுடன் சிந்திக்கும் திறன் வெளிப்படுகிறது. இங்கு தான் பெண்மையச் சிந்தனைக்கான பரந்த வெளி நிரப்பப்பட வேண்டிய அவசியம் உருவாகிறது.

எவ்வாறெனில் குடும்ப அமைப்பில் "பெண்ணாக்கல்" நிலையில் பெண்ணிற்கான விதிமுறைகளான புழங்கு பொருட்கள், விளையாட்டு, புழங்கு நேரம், குணநலன்கள் என்பவை காலம் காலமாகப் பின்பற்றப்படும் மரபாகவே இருத்தல் எனும் நிலை உடைக்கப்படல் வேண்டும். குழந்தை வளர்ப்பு நிலையில் வேறுபாடு இருத்தல் கூடாது. இந் நாடகத்தில் ராஜி வழியாகவே இச்சிக்கலை அணுகும் நிலையில் ராஜியின் மகன் சுந்தர் தனக்கு உதவ முன்வருகையில் ஏற்றுக் கொள்ளல் வேண்டும். இச் சிறு செயல் மாற்றம் சுந்தரிடம் நாளடைவில் அவன் வளர்ந்து பெரியவனாகும் போதும் அவனுக்குத் திருமணம் ஆகும் போதும் பெண்ணும் நம்மைப் போல் நமக்கு இணையானவளே என்ற உணர்வைக் கற்றுக் கொடுக்கும். அவன் தன் தாய் மீது கொண்ட அன்புணர்வோடு முன்னெடுக்கும் செயலால் அவனுக்குள் ஏற்படும் வலி , பெண்ணிற்கான வழியாய்க் கூட அமையக் கூடும்.

**முடிவுரை**

முன்னெடுப்புச் சிந்தனைகளை முன் எடுத்துச் சென்றால் மட்டுமே சமூக முன்னேற்றப் பாதைகளுக்கான மாற்றம் பிறக்கும். மாற்றுச் சிந்தனை உருவாக்கம் பிறரிடமிருந்து வர வேண்டும் என்பதை விட, மாற்று உருவாக்கச் சிந்தனை வித்துக்களாக நாம் மாறுவோம் என்னும் கருத்தை இந் நாடகக் கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன.

**முதன்மை ஆதாரம்**

1. எம். எஸ் காந்திமேரி - நளாயினி என்ற ஒருத்தி… தீ…

**துணைமை ஆதாரங்கள்**

1. விகரு. இராமநாதன் (தொகுப்பாசிரியர்) – ஸ்ரீஇந்து பப்ளிகேஷன்ஸ்,சென்னை. பதின்மூன்றாம் பதிப்பு , நவம்பர்2011.
2. விஜயலட்சுமி . த - பெண் பெண்ணியம் பெண்நிலை, காலசகம் வெளியீடு, நாகர்கோவில். முதற்பதிப்பு ,நவம்பர் 2020.